## கார்த்திகையில் கார்த்திகைநாள் இன்று

**(ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ.உ.வே.அண்ணங்கராசார்யஸ்வாமி, காஞ்சீபுரம்)**

ஆழ்வார்களில் திருமங்கையாழ்வாரும், ஆசார்யர்களில் நம்பிள்ளையும் திருவவதரித்த புனிதமான நன்னுள் இந்நாள். இருவருடையவும் பெருமைக்கடலில் சில திவலைகளைப் பருகுவோம். 'ப்ரபந்நஜநகூடஸ்தர் பராங்குச பரகால யதிவராதி₃கள்'' என்ற ஆசார்யஹ்ருதய சூர்ணையில் பராங்குசராகிற நம்மாழ்வாரோடு பரகாலராகிற திருமங்கையாழ்வாரைப் பிணைத்திருக்கையாலும், உபதேசரத்தினமாலையில் '**மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர் கோன் ஆறங்கங்கூற வவதரித்த**'' என்று மணவாள மாமுனிகள் விஶேஷித்தருளிச் செய்திருக்கையாலும் இவ்வாழ்வார்களிருவர்க்குமுள்ள பொருத்தங்களை (அதாவது, இருவருடையவும் அருளிச்செயல்களிற் காணும் ஒற்றுமைநயங்களை) எடுத்துக்காட்டி ரஸிகர்களை மகிழ்விப்போம்.

1. நம்மாழ்வார் விஸ்தரித்தருளிச் செய்த விஷயங்களைத் திருமங்கையாழ்வார் சுருக்கியருளிச்செய்வர்.

2. அவர் சுருக்கியருளிச்செய்ததை இவர் விஸ்தரித்தருளிச்செய்வர்.

3. சில விஷயங்களை இருவரும் ஸமமாக அருளிச்செய்வர்.

4. சில விஷயங்களில் கலியன் பரிஷ்காரம் காட்டுவர்.

ஆக, இந்த நான்கு ப்ரதிஜ்ஞைகளின் கீழ் இருவருடைய பாசுரங்களையு மெடுத்துக் காட்டி ரஸாநுபவம் செய்வோம்.

### 1, நம்மாழ்வார் விஸ்தரித்ததைத் திருமங்கையாழ்வார் சுருக்குவது:–

**தூதுவிடுதல்:** நம்மாழ்வார் தலைமகள் பாவனையில் தூதுவிட்டது நான்கு திருவாய்மொழிகள். '**அஞ்சிறைய மடநாராய்**, **வைகல் பூங்கழிவாய்**, **பொன்னுலகாளீரோ**, **எங்கானலகங்கழிவாய்**. ஆக இந்த நான்கு பதிகங்களில் நம்மாழ்வாரது தூது மிகவிரிவாக நிகழ்ந்திருக்கின்றது. திருமங்கையாழ்வாரால் இது மிகவும் ஸம்க்ஷேபிக்கப்பட்டது. பெரியதிருமொழியில் (3–6) **தூவிரிய மலருழக்கி**ப் பதிகத்தில் வயலாலி மணவாளனுக்குத் தூதுவிடத் தொடங்கி நான்கு பாசுரங்களோடு அதனை நிறுத்தி விட்டார். மேலே ஒன்பதாம் பத்தில் (9–4) காவார் மடற்பெண்ணை யென்கிற திருப்புல்லாணிப் பதிகத்தில் (2)**புள்ளினங்காள்! புல்லாணி அன்னமாய் நூல்பயந் தாற்கு ஆங்கிதனைச் செப்புமினே** என்றொரு பாசுரத்தில் மட்டுமே தூதுவிடுதல். திருவிருத்தத்திலுள்ள தூதுவிடுதலுக்குச் சேரத் திருநெடுந்தாண்டகத்திலுள்ளது. இருவருமிரண்டு பாசுரங்கள்.

**நரஸ்துதி விலக்குதல்:–** நம்மாழ்வார் திருவாய்மொழியில் (2–9) **சொன்னுல் விரோதமிது** என்னுந்திருவாய்மொழியில் '**சொன்னவில் வாழ்புலவீர்! சோறு கூறைக் காக மன்னுத மானிடரை வாழ்த்துதலாலென்னுகும்?**' என்ற திருவாய்மொழி நூற்றந்தாதிப்படியே நரஸ்துதியை விலக்கினது விஸ்தாரமாகவுள்ளது. இதனைத்

திருமங்கையாழ்வார் ஒரே பாட்டில் சுருக்கினர். பெரிய திருமொழி முதற்பதிகத்தில் '**இப்பிறப் பறியீர் .. கற்பகம் புலவர்களைகனென்றுலகில் கண்டவா தொண்டரைப்பாடும் சொற்பொருளாளீர்! சொல்லுகேன்வம்மின் சூழ்புனற் குடந்தையே தொழுமின்**' என்ற பாசுரங் காண்க.

**அநுகரித்துத் தரித்தல்:** திருவாய்மொழியில் (5–6) **கடல்ஞாலம் செய்தேனும் யானே யென்னும்** என்கிற பதிகத்தில் ''**கடல் ஞாலத் தீசனைமுன் காணுமல் நொந்தே, உடனவனுகரிக்கலுற்றுத் –திடமாக வாய்ந்த வனுய்த் தான்பேசும் மாறன்**' என்ற நூற்றந் தாதியின்படி யானே யானே யென்று சொல்லி எம்பெருமானுகவனுகரித்துப் பேசுதல் விஸ்தாரமாகவுள்ளது. திருமங்கை யாழ்வார்க்கு இவ்வநுவபம் ஒரே பாசுரத்தில் சுருக்கமாக நிகழ்ந்தது. பெரியதிருமொழி யில் (8–2–6) '**வடவரை நின்றும் வந்து , இன்று கணபுரமிடவகை கொள்வது யாமென்று பேசினுள்**', திருவேங்கடமலையில் நின்றும் திருக்கண்ண புரத்தேறவந்து சௌரிப்பெருமாளாகக் காட்சி தருவது யானே யென்றது இதில். நம்மாழ்வாருடைய அநுகாரம் தாய்ப்பேச் சால் வெளிவந்தது போலவே இவருடைய அநுகாரமும் தாய்ப்பேச்சாலேயே வெளி வந்த தென்பதும் குறிக்கொள்ளத் தக்கது. கடல் ஞாலப்பதிகமும் தெள்ளியீர் பதிகமும் தாய்ப்பேச்சேயன்றோ.

**2, நம்மாழ்வார் சுருக்கியதைக் கலியன் விரித்துரைப்பது.**

பிரளயத்தில் ஸகல தெய்வங்களும் எம்பெருமானுடைய திருவயிற்றில் புகுந்து ரக்ஷைபெறும் விஷயத்தை நம்மாழ்வார் திருவாசிரியத்தில் (7) **நளிர்மதிச்சடையனும் நான்முகக் கடவுளும், தளிரொளியிமைய வர் தலைவனுமுதலா... ஒருபொருள் புறப்பா டின்றி முழுவதுமகப்படக் கரந்து, ஓராலிலைச் சேர்ந்த எம்பெருமா மாயனை யல்லது, ஒருமாதெய்வம் மற்றுடையமோ யாமே!** என்று சுருக்கி யநுஸந்தித்ததைத் திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (11–6) **'மைந்நின்ற கருங்கடல் வாயுலகின்றி** என்ற பதிகத்தில் (10) **தேவரையுமசுரரையும் திசைகளையுங் கடல்களையும் மற்றும் முற்றும், யாவரையு மொழியாமே யெம்பெருமானுண்டுமிழ்ந்த தறிந்து சொன்ன** என்ற நிகமனப் பாசுரத்தின்படியே விஸ்தரித்தருளிச்செய்த வாறு காண்க.

திருவாய்மொழியில் (5–3) மாசறு சோதிப் பதிகத்தில் (9) **குதிரியாய் மடலூர்துமே** என்றும் (10) **யாமடலூர்ந்தும்** என்றும் மடலூர்வதான ப்ரஸ்தாவத்தை அதிஸம்க்ஷேபமாகச் செய்தார் நம்மாழ்வார். திருமங்கையாழ்வார் இதனை **சிறியதிருமடல், பெரியதிருமடல்** என்னும் இரண்டு திவ்வியப் பிரபந்தங்களினுல் மிகமிக விஸ்தரித்தருளினர்.

**3. இருவரும் ஸமமாக அருளிச்செய்தது.**

நம்மாழ்வார் திருவாய்மொழியில் (3–7) **பயிலுஞ்சுடரொளியிலும்** (8–10) **நெடுமாற்கடிமையிலும்** அநுஸந்தித்த பாகவத ஶேஷத்வத்தை திருமங்கை யாழ்வார் தமது பெரியதிருமொழியில் (2–6) **நண்ணுதவாளவுணர்** (7–4) **கண்சோர**

**வெங்குருதி** ஆகிய இரண்டு திருமொழிகளில் அநுஸந்தித்தார்.

திருவாய் மொழியில் (6–6)மாலுக்கு வையமளந்த பதிகத்தில் ''**இழந்தது சங்கே, இழந்தது மாமை நிறமே, இழந்தது பீடே, ... இழந்தது கட்டே**'' என்று எல்லாமிழந்ததாகத் தாய்ப்பேச்சாலே தெரிவிக்கப்பட்டது. திருமங்கை யாழ்வார் தமது திருமொழியில் (8–3) **கரையெடுத்த சுரிசங்கு** மென்னும் பதிகத்தில் **இழந்தேனென் வரிவளையே, இழந்தேனென் கனவளையே, இழந்தேனென் சரிவளையே.. இழந்தேனென் பெய்வளையே** என்று தாமிழந்தவற்றைத் தம் திருவாக்கினுலேயே வெளியிட்டார்.

திருவாய்மொழியில் 'கங்குலும் பகலும்' பதிகத்தில் தாய்ப்பேச்சாலே '**இவள் திறத்து என்செய்கின்ருயே, இவள் திறத்தென் சிந்தித்தாயே,** என்று எம்பெருமான் திருவுள்ள மென்னவென்று கேட்கப்பட்டது. பெரியதிருமொழியில் (2–7) **திவளும் வெண்மதிபோல்** என்கிற திருவிடவெந்தைப் பதிகத்தில்'**உன் மனத்தால் என்நினைந்திருந் தாய்?,** என்று பாசுரந்தோறும் தாய்ப்பேச் சாலே அந்தக் கேள்வியே நிகழ்ந்தது.

**4. கலியன் பரிஷ்காரம் காட்டியது.**

நம்மாழ்வார் செய்தருளின அநுபவங்களில் சிலவற்றில் திருமங்கை யாழ்வார் பரிஷ்காரம் செய்திருப்பது முண்டு. திருவாய்மொழியில் (4–6) தீர்ப்பாரை யாமினியில் தேவதாந்தரக் கட்டுவிச்சி வந்து புகுந்தமை சொல்லிற்று. சிறியதிருமடலிலும் திருநெடுந்தாண்டகத் திலும் (11) பகவத்ப்ரவணையான கட்டுவிச்சி யின் பேச்சு வெளியிடப்பட்டது. திருவாய்மொழியில் (6–1) உண்ணுஞ்சோறு பதிகத்தில் ஆழ்வார் தாமே தனியே திருக்கோளூர்க்கு நடந்தமை சொல்லிற்று. பெரியதிருமொழியில் (3–7) கள்வன் கொல் பதிகத்தில் வயலாலி மணவாளன் வந்து ஆழ்வாரைக் கைப்பற்றிக்கொண்டு போனதாகச் சொல்லிற்று.

இங்ஙனே பலவகை யநுபவ ரஸங்கள் சுவைக்கத்தக்கன.

*****